## DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.

**Calendar Case No. 209/2025**

**Prosecution Witness**:1

| Name | (PW1) Jegadhish | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | | Calling | |
| Village | | **Age** | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10th **day of February 2026** by S.Ramakrishnan Junior Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

***(Accused produced through Video Conference.***
***Legal Aid Counsel Thiru. G.K.Thangaval present)***

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

**1)** நான் தற்போது தொப்பபாளையத்தில் குடியிருந்து கொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். நான் தொப்பபாளையத்தில் என் மனைவி திலகத்துடன் குடியிருந்து வருகிறேன். எனது மகன் ஹரிஹரசுதன் திருமணமாகி மனைவியுடன் சென்னையில் குடியிருந்து வருகிறார். கடந்த 30.04.2025ம் தேதி மாலை 06.00 மணி சுமாருக்கு எனது மனைவி திலகம் என்பவருடன் சென்னைக்கு சென்றேன். 05.05.2025ம் தேதி காலை 06.45 மணிக்கு சென்னையில் இருந்து திரும்பி தொப்பபாளையத்தில் உள்ள எனது வீட்டிற்கு வந்து பார்த்தபோது, வீட்டின் வெளிகேட் பூட்டப்பட்டிருந்தது. கேட்டை திறந்து நாங்கள் உள்ளே சென்று வீட்டினுள் சென்று பார்த்தபோது வீட்டுக் கதவு உடைக்கப்பட்டிருந்தது. நான் உள்ளே சென்று வீட்டில் உள்ள இரண்டு பீரோக்களையும் பார்த்தபோது பீரோ திறந்திருந்தது, துணிகள் கலைந்திருந்தது. பொருட்கள் களவு போகவில்லை. நான் சம்பவம் தொடர்பாக சிவகிரி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். நீதிமன்றத்தில் தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அது சிவகிரி காவல் நிலையத்தில் நான் கொடுத்த புகார்தான். **புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**2)** அதன் பிறகு 28.08.2025ம் தேதி என் வீட்டை உடைத்து திருட முயற்சித்தவர்களை போலீசார் சொன்னார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

PANDIARAJAN

Digitally signed by PANDIARAJAN
Date: 2026.02.10 15:27:35 +0530

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :–**

05.05.2025ம் தேதியன்று புகார் கொடுத்தேனா என்றால் ஆமாம். போலீசார் அப்போதே வந்து பார்த்தார்கள். உடைந்த பூட்டை புகைப்படம் எடுத்துக் கொண்டார்களா என்றால் உடைந்த பூட்டையும் கதவையும் புகைப்படம் எடுத்துக் கொண்டார்கள். நான் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் கதவை உடைக்கவில்லை என்றால் சரியல்ல. புள்ளி விவர கணக்கிற்காக போலீசார் கேட்டுக் கொண்டதின் பேரில் பொய் புகார் கொடுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN
Digitally signed by PANDIARAJAN
Date: 2026.02.10 15:27:39 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 209/2025**
**Prosecution Witness**:2

| Name | (PW2) Thilaka | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | | Calling | |
| Village | | **Age** | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10th **day of February 2026** by S.Ramakrishnan Junior Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

***(Accused produced through Video Conference.***
***Legal Aid Counsel Thiru. G.K.Thangaval present)***

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

**1)** நான் தற்போது தொப்பபாளையத்தில் குடியிருந்து கொண்டு அங்கன்வாடி மேற்பார்வையாளராக வேலை செய்து வருகிறேன். நான் தொப்பபாளையத்தில் என் கணவர் ஜெகதீசனுடன் குடியிருந்து வருகிறேன். எனது மகன் ஹரிஹரசுதன் ஐ.டி கம்பெனியில் வேலை செய்து வருகிறார். எனது மகன் திருமணமாகி மனைவியுடன் சென்னையில் குடியிருந்து வருகிறார். நான் என் கணவருடன் ஏப்ரல் மாத 28ம் தேதி வாக்கில் சென்னைக்கு சென்று எனது மகனை பார்த்துவிட்டு 05.05.2025ம் தேதி தொப்பம்பாளையத்தில் உள்ள எனது வீட்டிற்கு காலை 06.45 மணிக்கு வந்து பார்த்தபோது வீட்டின் வெளிகேட் பூட்டப்பட்டிருந்தது. கதவை திறந்து உள்ளே சென்று பார்த்தபோது வீட்டின் கதவு உடைக்கப்பட்டிருந்தது. உள்ளே சென்று பார்த்தபோது பீரோ திறந்து கலைந்து கிடந்தது. பொருட்கள் எதுவும் களவு போகவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :-**

1) 05.05.2025ம் தேதியன்று சிவகிரி காவல் நிலையத்தில் பணிபுரியும் ராஜாமணி என்பவருக்கு போன் செய்தோம் என்றால் சரிதான். போன் செய்தவுடன் போலீசார் சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்றால் வந்தார்கள். அப்போதே போலீசார் என்னிடம் விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள் என்றால் ஆமாம். நான் சொல்வதுபோல்

சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும், எனது கணவர் கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.02.10 15:27:54 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 209/2025**
**Prosecution Witness**:3

| | | | |
|---|---|---|---|
| Name | (PW3) Nandhu | Taluk | |
| Father's Name | | Calling | |
| Village | | **Age** | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10th **day of February 2026** by S.Ramakrishnan Junior Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

***(Accused produced through Video Conference.***
***Legal Aid Counsel Thiru. G.K.Thangaval present)***

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

**1)** நான் தற்போது தொப்பபாளையத்தில் குடியிருந்து கொண்டு பைனான்ஸ் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ஜெகதீசை தெரியும். கடந்த 2025ம் வருடம் மே மாதம் 5ம் தேதி நான் எனது தோட்டத்தில் இருந்து காலை 10.00 மணி சுமாருக்கு வீட்டிற்கு சென்று கொண்டிருந்தபோது ஜெகதீசன் என்பவரது வீட்டின் கதவின் பூட்டு உடைக்கப்பட்டிருந்தது. நான் உள்ளே சென்று பார்த்தேன். பீரோக்கள் திறந்திருந்தது. துணிமணிகள் கலைந்திருந்தது. அதன் பின்னிட்டு போலீசார் 10.30 மணியளவில் விசாரணை செய்து மேப் போட்டார்கள். என்னிடம் சாட்சி கையொப்பம் கேட்டார்கள். நான் கையொப்பம் செய்தேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். **பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :-**

நான் சம்பவம் நடந்த வீட்டை எப்போது சென்று பார்த்தேன் என்றால் 06.05.2025ம் தேதியன்று காலை 10.30 - 11.00 மணிக்கு சென்று பார்த்தேன். அப்போது சம்பவ இடத்தில் போலீசார் இருந்தார்கள் என்றால் சரிதான். நான் போகும்போது போலீசார் வரைபடம் வரைந்து கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். போலீசார்

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.02.10 15:27:59 +0530

பூட்டை எடுத்ததை பார்த்தேனா என்றால் பார்த்தேன். சம்பவ இடத்தை புகைப்படம் எடுத்தார்களா என்றால் எடுத்தார்கள். நான் சம்பவ இடத்தில் கையெழுத்து செய்யவில்லை என்றாலும் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை:- இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN

Digitally signed by PANDIARAJAN
Date: 2026.02.10 15:28:03 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.

## DEPOSITION OF WITNESS

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 209/2025**
**Prosecution Witness**:4

| | | | |
|---|---|---|---|
| Name | (PW4) Somasundaran | Taluk | |
| Father's Name | | Calling | |
| Village | | **Age** | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10th **day of February 2026** by S.Ramakrishnan Junior Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

***(Accused produced through Video Conference.***
***Legal Aid Counsel Thiru. G.K.Thangaval present)***

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

**1)** நான் தற்போது தொப்பபாளையத்தில் அ.சா.1 வீட்டிற்கு அருகில் குடியிருந்து கொண்டு விவசாய வேலை செய்து வருகிறேன். கடந்த 06.05.2025ம் தேதி ஜெகதீசன் தனது வீட்டில் திருடு போய்விட்டது என்று சொன்னார். பீரோ, கதவு எல்லாம் உடைந்திருப்பதாக சொன்னார். அதன் பின்னர் 11.00 மணியளவில் போலீசார் வந்து விசாரணை செய்தார்கள். வரைபடம் வரைந்தார்கள். என்னிடம் கையெழுத்து கேட்டார்கள். நான் கையெழுத்து செய்தேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். **பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :-**

நான் சம்பவ இடத்திற்கு செல்லும்போதே போலீசார் இருந்தார்கள் என்றால் சரிதான். அப்போது 10 நபர்கள் சம்பவ இடத்தில் நின்று கொண்டிருந்தார்கள் எனற்ால் சரிதான். ஜெகதீசன் சொல்லித்தான் நான் சென்றேன் என்றால் சரிதான். நான் சென்ற பின்னர் போலீசார் வரைபடம் வரைந்ததில் நான் கையொப்பம் செய்தேன். உடைந்துபோன கதவின் பூட்டை போட்டோ எடுத்தார்கள் என்றால் எடுத்தார்கள். மேற்படி நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்று தெரியாது

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.02.10 15:28:08 +0530

என்றால் சரிதான். நான் சம்பவ இடத்தில் கையெழுத்து செய்யவில்லை என்றாலும் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN

Digitally signed by PANDIARAJAN
Date: 2026.02.10 15:28:14 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.